**விலை குறையும் அபாயம் அறுவடை தேங்காயை உடனே விற்க வலியுறுத்தல்**

First Published : 26 Jun 2011 02:54:35 PM IST

திருவண்ணாமலை, ஜூன் 25: விலை குறையும் அபாயம் உள்ளதால் அறுவடை செய்த தேங்காயை விவசாயிகள் உடனே விற்றுவிடலாம் என வேளாண் துறை வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் மா.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் 0.38 மில்லியன் ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் 65 முதல் 75 சதம் வரை எண்ணெய் பயன்பாட்டுக்கே செல்கிறது. கடந்த ஒன்றரை ஆண்டாக ஏற்றுமதியும் உள்ளது. சென்ற ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் ஒரு தேங்காய்க்கு ரூ.4-6 என்ற நிலை மாறி தற்போது ரூ.10-12 என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், பொள்ளாச்சிப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டது.

அங்குள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய விலைகளை ஆராய்ந்ததில் ஜூலை மாதத்தில் ஒரு தேங்காய் விலைரூ.10-12 இருக்கும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. தேங்காய் விலை ஏற்றம் பெற குறைந்த வாய்ப்புகளே உள்ளன. திருவண்ணாமலை மாவட்டத்தில் தேங்காய் அறுவடை செய்த விவசாயிகள் இருப்பு வைக்காமல் உடனே அவற்றை விற்பனை செய்து லாபம் ஈட்டலாம் என அவர் தெரிவித்துள்ளார்

**கோடையில் கால்நடை பராமரிப்பு முறைகள்**

First Published : 25 Jun 2011 01:04:03 PM IST

பெரம்பலூர், ஜூன் 24: கோடை காலத்தில் கால்நடைகளைப் பராமரிப்பது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெரம்பலூர் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோடை காலத்தில் கடுமையான வறட்சியின் காரணமாக கால்நடைகள் மேய்ச்சல் இல்லாமல் பாதிப்புக்குள்ளாகின்றன. இதனால், பால் உற்பத்தி குறைவதோடு, வெப்ப அயர்ச்சியும் ஏற்படுகிறது. மேலும், வளர் சிதை மாற்ற பாதிப்பு, இனப் பெருக்கத்தில் பாதிப்பு, வளர்ச்சி குறைவு உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படுகின்றன.

இதேபோல, தட்பவெட்ப அயர்ச்சியினால் நோய் எதிர்ப்புத் திறன் பாதிக்கப்பட்டு, கோமாரி, ஆந்த்ராக்ஸ், அம்மை, ஆட்டுக் கொல்லி, தாடை வீக்கம் போன்ற நோய்கள் உண்டாகின்றன.

எனவே, இந்த நோய்களுக்கு எதிராக தடுப்பூசிகள் போட வேண்டும். உற்பத்தித் திறனை அதிகரிக்க, காற்றோட்டம் உள்ள இடங்களில் அல்லது நீர்தெளித்து கால்நடைகளை குளுமையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

காலை 11 மணி வரையிலும், மதியம் 3 மணியிலிருந்து 6 மணி வரையிலும் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் சூரிய ஒளியின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கலாம். தண்ணீர் மற்றும் தீவனத் தொட்டிகளை நிழல் பகுதிகளில் வைத்து, தொட்டிகளில் எப்பொழுதும் தண்ணீர் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பண்ணைக் கொட்டகைகளில் கூரை அல்லது தென்னங்கீற்றுகளைப் பரப்பி, அவ்வப்போது நீர்த்தெளித்து ஈரக் காற்றினை நிலவச் செய்ய வேண்டும். கால்நடைகளின் உடல் வெப்பத்தைத் தணிக்க அதிகளவு எரிசக்தி தேவைப்படுவதால், தரமான உலர் தீவனம் அளிக்க வேண்டும்.

ஆனால், உலர் தீவனத்தை கால்நடைகள் நேரடியாக உள்கொள்ளக் கூடாது. எனவே, ஈஸ்ட் மற்றும் தாதுக் கலவைகளைச் சேர்த்து அளிப்பதன் மூலம், உற்பத்தி குறையாமல் பார்த்துக் கொள்ளலாம் என்றார் அவர்.

**பயிர் காப்பீட்டு நிவாரணம் வழங்க கோரிக்கை**

First Published : 26 Jun 2011 12:22:56 PM IST

சிவகங்கை, ஜூன் 25: சாக்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு உள்பட்ட பகுதிகளில் பயிர் காப்பீட்டு நிவாரணம் வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கோடிக்கரை கிராம விவசாயி முத்துராக்கு கூறியது:

சாக்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 50க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. விவசாயத்தையே நம்பியுள்ள இந்த கிராம விவசாயிகள் அனைவரும் 2009-ம் ஆண்டில் பயிர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகை செலுத்தியுள்ளோம்.

இந்நிலையில் கடந்த 2009-ம் ஆண்டில் இப்பகுதியில் போதுமான மழை இல்லாததால் முழுமையான விளைச்சல் பெற முடியவில்லை. எனவே அரசு வழங்கும் நிவாரணத் தொகையை உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தொங்கும் மின் கம்பிகள்

பி.நெற்புகப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சக்திவேல் கூறுகையில், கல்லல் ஒன்றியம் பி.நெற்புகப்பட்டியில் விவசாய பம்ப்செட்டுகளுக்கு செல்லும் மின் வழித்தடத்தில் ஒற்றை கம்பி

பொருத்தும் ஆங்கிள்களை வைத்து 3 வழி கம்பிகளை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் மின் கம்பிகளும் ஆபத்தான நிலையில் தாழ்வாக எட்டிப் பிடிக்கும் அளவில் தொங்கிக் கொண்டுள்ளது. இவற்றை சரிசெய்வதுடன் பழுதடைந்த மின் கம்பங்களையும் மாற்ற வேண்டும்.

சிவகங்கை மாவட்டத்தில் வருவாய் பிர்க்கா அளவில் குறை தீர்வுக் கூட்டங்கள் வாரந்தோறும் நடைபெற்று வந்தன. தற்போது அவ்வாறு நடைபெறுவதில்லை. எனவே விவசாயிகளின் நலன் கருதி மீண்டும் பிர்க்கா அளவில் கூட்டங்களை நடத்த வேண்டும் என்றார்.

**மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் ஆய்வு**

First Published : 25 Jun 2011 12:28:25 PM IST

கும்பகோணம், ஜூன் 24: கொள்ளிடம் ஆற்றின் கரையில் ரூ. 267 கோடியில் நடைபெற்று வரும் வெள்ளத்தடுப்பு பணிகளை மத்திய நீர்வள ஆணையத்தின் கண்காணிப்பு இயக்குநர் டி.கே. சிவராஜன், உதவி இயக்குநர் எம்.எஸ். சரவணக்குமார் ஆகியோர் வியாழக்கிழமை ஆய்வு செய்தனர்.

கடந்த 2005-ல் காவிரியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், கொள்ளிடம் ஆற்றின் இரு கரைகளிலும் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு 193 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இதையடுத்து, மத்திய நீர்வள ஆணையத்தின் சார்பில், மத்திய அரசு 75 சதம், மாநில அரசு 25 சதப் பங்களிப்புடன் நிதி ஒதுக்கப்பட்டு, வெள்ளத்தடுப்பு திட்டத்தின் கீழ் கொள்ளிடம் ஆற்றில் இரு கரைகளையும் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கொள்ளிடம் ஆற்றின் வலது கரையில் கல்லணையில் தொடங்கி அணைக்கரை வரை 108 கி.மீ. தொலைவிற்கு ரூ. 95.97 கோடியிலும், அணைக்கரையில் தொடங்கி மகேந்திரப்பள்ளி வரை 60 கி.மீ. தொலைவிற்கு 171.45 கோடியிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், மத்திய நீர்வள ஆணையத்தின் கண்காணிப்பு இயக்குநரக இயக்குநர் டி.கே. சிவராஜன், உதவி இயக்குநர் எம்.எஸ். சரவணக்குமார் ஆகியோர் கல்லணை முதல் மகேந்திரப்பள்ளி வரை நடைபெறும் வெள்ளத்தடுப்பு மேம்பாட்டுப் பணிகளை வியாழக்கிழமை பார்வையிட்டனர்.

ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறும் சாலை அகலப்படுத்தும் பணி, மதகுகள் சீரமைப்புப் பணி, அணுகுசாலைகள் அமைக்கும் பணி ஆகியவற்றின் தரத்தை அவர்கள் ஆய்வு செய்தனர்.

கும்பகோணத்தை அடுத்த குருகூரில் வடிகால் அமைக்கும் பணியைப் பார்வையிட்ட அவர்கள், பணிகளை 2012, மார்ச் மாத இறுதிக்குள் முடிக்க வேண்டும். மழைக் காலங்களில் தற்போது அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் மண் அரிப்பு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். கொள்ளிடத்தில் 4.5 லட்சம் கன அடி நீர் சென்றாலும், எவ்வித சேதமும் ஏற்படாதவாறு கரைகளை அமைக்க வேண்டும் என அவர்கள் ஆலோசனை கூறினர்.

ஆய்வின் போது, கீழ்காவிரி வடிநில வட்ட செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், மயிலாடுதுறை வட்டச் செயற்பொறியாளர் பக்தவத்சலம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**"புள்ளி விவரங்களை அளித்து விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும்'**

First Published : 25 Jun 2011 12:27:29 PM IST

கரூர், ஜூன் 24: விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் நடைபெற்று வரும் புள்ளி விவர சேகரிப்புக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தாந்தோன்றிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க. கவிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் நோக்கில் அரசு பல்வேறு புதிய திட்டங்களைத் தீட்டி வருகிறது. புதிய திட்டங்கள் வகுப்பதற்கும், உற்பத்தி மற்றும் வருமானத்தை இரு மடங்காக உயர்த்திடவும் விவசாயிகளின் அடிப்படை புள்ளி விவரங்கள், சாகுபடி விவரங்களை தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

ஒவ்வொரு விவசாயியின் நிலம், நீர் வசதி, மண்வளம், சாகுபடி பயிர், சாகுபடி பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இரு மடங்கு மகசூலை அதிகரிக்க திட்டங்கள் தீட்டப்படும்.

இதைக் கருத்தில் கொண்டு, தாந்தோன்றிமலை வட்டாரத்தில் கிராமங்கள் தோறும் சிறு மற்றும் குறு விவசாயிகளின் அடிப்படை புள்ளி விவரங்களை சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அதுசமயம் விவசாயிகள் தங்களது விவரங்களை தாந்தோன்றிமலையிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்திலோ, தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலர்களை தொடர்பு கொண்டோ பதிவு செய்து கொள்ளலாம்.

தாந்தோன்றிமலை, மூக்கணாங்குறிச்சி பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், உதவி வேளாண் அலுவலர் து. கருப்பையாவை - 97151 57000, ஆண்டாங்கோவில் எஸ். ரமேஷ் - 95973 25694, உப்பிடமங்கலம் மு. உமாகலைவாணி - 9500895977, வெள்ளியணை மு. கந்தவேல் - 99433 01345 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

மேலும், கிராமங்கள் தோறும் வேளாண்மை அலுவலர்கள் விவரங்களை சேகரித்து வருகிறார்கள். அவர்களுக்கு உரிய ஒத்துழைப்பு அளித்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**நெல் விதைகளுக்கு மானியம்**

First Published : 25 Jun 2011 01:05:00 PM IST

புதுக்கோட்டை, ஜூன் 24: தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நெல் விதைகளுக்கு கிலோவுக்கு ரூ. 5 மானியம் வழங்கப்படுகிறது.

இதுதொடர்பாக புதுக்கோட்டை வேளாண் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை வட்டாரத்தில் தற்போது பரவலாக குறுவை சாகுபடிக்கான நாற்றாங்கால் தயாரிக்கும் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், குறைந்த செலவில் அதிக லாபம் பெற திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் நாற்றாங்கால் தயாரித்து நடவு மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு ஏக்கருக்கு 2 கிலோ விதை நெல் போதுமானது. ஒரு ஏக்கருக்கு 1 சென்ட் அளவில் அதாவது 5 மீ. நீளமும், 1 மீ. அகலம் கொண்ட 8 பாத்திகளை அமைக்க வேண்டும்.

அதனடியில் உரச் சாக்குகள் அல்லது பாலிதீன் பைகளை விரித்து, அதன் மேல் ஒரு அங்குலம் மண்ணைப் பரப்பி, மக்கிய தொழுஉரத்தை இட வேண்டும்.

அதன் மேல் முளைவிட்ட மூன்றாம் கொம்பு விதைகளைப் பரப்ப வேண்டும். மேலும், 790 கிராம் டி.ஏ.பி. உரத்தைப் பொடி செய்து பரவலாகப் பாத்தியில் தூவ வேண்டும். விதைகளைத் தூவும் போது பரவலாகத் தூவ வேண்டும். இவ்வாறு செய்வதால் நாற்றுகள் வாளிப்பாகவும், வீரியமாகவும் வளரும்.

தழைச்சத்து பற்றாக்குறையால் நாற்றில் வெளுப்பு தென்பட்டால் யூரியா உரக் கரைசலை (0.5 சதம்- அதாவது 10 லி. நீரில் 50 கிராம் அளவில் கரைத்து) தெளிக்க வேண்டும்.

நடவு வயலை நன்றாக உழுது தயாரிக்க வேண்டும். கடைசி உழவுக்குப் பிறகு நடவுக்கு முன்னதாகவோ அல்லது நடவு செய்த ஒரு வார காலத்துக்குள்ளாகவோ ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுண் சத்தை மணலுடன் கலந்து சீராகத் தூவ வேண்டும்.

நாற்றின் வயது 12- 14 நாள்கள் ஆகும் போது அதைப் பறித்து, 25 செமீ-க்கு 25 செமீ இடைவெளியில் மார்க்கர் கருவி கொண்டு அடையாளம் செய்து ஒற்றை நாற்றாக நடவு செய்ய வேண்டும்.

வேளாண் கிடங்கில் தேவையான அளவு நெல் நுண்சத்து 50 சத மானியத்தில் வழங்க இருப்புவைக்கப்பட்டுள்ளது.

விதைகள் தேவைப்படும் விவசாயிகள் தனியார் விதை விற்பனை நிலையங்களிலும், சான்று பெற்ற நெல் விதைகளை கிலோவுக்கு ரூ. 5 மானியத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்கி அதிக லாபம் பெறலாம்.

மேலும், திருந்திய நெல் சாகுபடி முறைக்குத் தேவைப்படும் கோனோவீடர் (உருளும் களைக் கருவி) 50 சத மானியத்தில் வழங்க இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பெட்ரோலில் இயங்கும் விசைக் கோனாவீடர் கருவியும் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்க இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

விசைகோனாவீடர் கருவி ஒன்றின் முழு விலை ரூ. 35 ஆயிரம் என்ற நிலையில் ரூ. 15 ஆயிரம் மானியத்தில் வழங்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு ஜூன் 28-ல் ஒற்றை நெல் சாகுபடி பயிற்சி**

First Published : 25 Jun 2011 01:05:08 PM IST

ஆலங்குடி, ஜூன் 24: ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் ஒற்றை நெல் சாகுபடி முறை குறித்து விவசாயிகளுக்கு வருகிற 28-ம் தேதி இலவசப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் சின்னையன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேளாண் அறிவியல் மையத்தில் வருகிற 28-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும் இந்தப் பயிற்சியில் நிகழாண்டு கரீப் பருவத்தில் நெல் சாகுபடியில் அதிகளவு விளைச்சலை அதிகரிக்க ஒற்றை நாற்று நெல் சாகுபடி எனும் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்து இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், நோய் எதிர்ப்பு திறன் கொண்ட விதைகள், விதை நேர்த்தி, விளக்குப் பொறி அமைத்தல், மஞ்சள் ஒட்டுப் பொறி வைத்தல், உயிரியல் முறையில் பூச்சிக் கட்டுப்பாடு, தாவர பூச்சிக்கொல்லிகள், எலி ஒழிப்பு உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்படும்.

நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இந்தப் பயிற்சி வரப் பிரசாதமாக அமையும். எனவே, விவசாயிகள் தவறாது இந்தப் பயிற்சியில் பங்கேற்று பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு 04322 290321 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

**எள் அறுவடைக்கு பின் தொழில் நுட்பம்:வேளாண்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,01:22 IST

தர்மபுரி: எள் அறுவடைக்கு பின், செய்ய வேண்டிய தொழில் நுட்பம் குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. வேளாண் அலுவலர் (வேளாண், வணிகம்) தாம்சன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாப்பாரப்பட்டி, கோடிஅள்ளி, எஸ்.குள்ளாத்திரம்பட்டி, ரங்காபுரம், ஆதனூர், ஏரியூர், நெருப்பூர், பி.அக்ரஹாரம், கொட்டாவூர், ஊட்டமலை, பிலிகுண்டு, பாலக்கோடு, காரிமங்கலம், மொரப்பூர், நல்லம்பள்ளி உள்ளிட்ட

பகுதிகளில், 4,432 ஹெக்டேரில் எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில், 20 முதல் 30 நாட்களில் எள் அறுவடை பணிகள் துவங்க உள்ளது. எள் எண்ணெய் உபயோகம் நாளுக்கு, நாள் அதிகரித்து வரும் நிலையில் நல்ல தரமான எள் விதை உற்பத்தி செய்வது அவசியம். எள் விதைகளில், 51 முதல் 52 சதம் எண்ணெய் சத்து கிடைக்கிறது. தரமான எள் உற்பத்தி செய்வதால், கூடுதல் விலை, அதிக எண்ணெய் சத்து மற்றும் கசப்பு தன்மையற்ற எண்ணெய் கிடைக்க வாய்ப்புள்ளது. எள் அறுவடைக்கு பின், தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடித்து கூடுதல் வருவாய் பெறலாம். எள் பயிறு அறுவடையின் போது, செடியின் கீழ் பகுதியில், 25 சதவீதம் இலைகள் உதிர்ந்தும் மேலே உள்ள இலைகள் மற்றும் தண்டு பகுதி மஞ்சள் நிறமாக மாறியிருக்க வேண்டும். எள் காய்கள் பாதி அளவு மஞ்சள் நிறம் அடைந்து விட்டால், பயிர் அறுவடை செய்ய ஏற்ற பருவமாகும். எள் பயிரின் கீழ் பகுதியில் இருந்து, 10வது காயை உடைத்து பார்த்தால், உள்ளே இருக்கும் விதைகள் கறுப்பு நிறமாக மாறியிருந்தால், அறுவடை செய்யலாம். (இது கறுப்பு எள் விதைக்கு மட்டும் பொருந்தும்). வெள்ளை எள் பயிருக்கு எள் விதை வெள்ளை நிறம் அடைய வேண்டும். இந்த நிலையை தாண்டி அறுவடை செய்தால் எள் காய்கள் வெடித்து விதைகள் சிதறி சேதம் அடையும். எள் பயிரை தரை மட்டத்தில் அறுத்து எடுக்க வேண்டும். செடியின் மேல் பகுதியை உள்புறமும், அடிப்பாகமும் வெளிப்புறமும் இருக்கும்படி வைத்து வட்ட வடிவாக, திறந்த வெளியில் அடுக்கி வைக்க வேண்டும். அடுக்கிய எள் செடியில் உள்ள காய்கள் ஒட்டு மொத்தமாக முதிர்ச்சி அடைய, மேல் பகுதியில் வைக்கோல் போட்டு மூடி வைக்க வேண்டும். மூன்று நாட்கள் கழித்து எள் பயிரை எடுத்து களத்தில் காயப்பேட வேண்டும். மூன்று முதல் ஐந்து நாட்கள் காய வைத்து பின் விதைகளை தனியே பிரித்து எடுக்க வேண்டும். பிரிக்கப்பட்ட எள் விதையில் கலந்துள்ள கல், மண், இலைசருகுகள், சுருங்கிய, முதிராத விதைகள், பழுதுபட்ட விதைகள் ஆகியவற்றை தனியே பிரித்து எடுக்க வேண்டும். ஒரு லிட்டர் எள் விதையின் எடை, 630 கிராம் இருக்க வேண்டும். அப்போது தான் முதல் தரமான எள்ளாக இருக்கும். காய்ந்த எள் விதையின் ஈரப்பதம், ஐந்து முதல் ஒன்பது சதவீதத்துக்கு இருந்தால் தரமான எள் விதையாகும். எள் விதைகள் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் வேளாண் வணிக அலுவலர்களால் மூன்று ரகங்களாக பிரிக்கப்படுகிறது. மேலும், விபரங்கள் பெற விரும்புவோர், வேளாண் உதவி அலுவலர்களை (வேளாண் வணிகள்) தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஆடி பட்டத்தில் அதிக மகசூல் பெற மக்காசோளம் பயிரிட வேண்டுகோள் : வேளாண் அதிகாரி அறிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,01:00 IST

விழுப்புரம் : ஆடி பட்டத்தில் மக்காசோளம் பயிரிட்டு அதிக வருவாய் பெற விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து விழுப்புரம் வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன்(பொ) வெளியிட்டுள்ள அறிக்கை: தென்மேற்கு பருவமழை காலத்தில் ஆடிபட்டம் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த பருவத்தில் குறைந்த தண்ணீர் மற்றும் குறைந்த செலவில் அதிக வருமானத்தை ஈட்ட விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிடலாம். இதில் கோ.எச்.(எம்) 4 என்ற 94 நாட்கள் பயிர் மற்றும் கோ.1 என்ற 110 நாட்கள் பயிர் ரகங்கள் உள்ளன. ஒரு ஏக்கருக்கு 6 கிலோ விதைகளை, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் சேர்த்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு அசோஸட்பைரில்லம் ஒரு பொட்டலம் போட்டு நுண்ணுயிர் விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின்பு 4 செ.மீ., ஆழத்தில் விதைகளை ஊன்றி நன்கு மண்ணால் மூட வேண்டும். ஒவ்வொரு குழியிலும் ஒன்று அல்லது இரண்டு விதைகளை ஊன்றலாம். விதைத்த எட்டாம் நாள் குழிக்கு நன்கு வளர்ந்துள்ள ஒரு செடியை மட்டும் விட்டுவிட்டு மற்றதை நீக்க வேண்டும். செடி முளைக்காத இடத்தில் குழிக்கு இரண்டு விதைகள் ஊன்றி நீர் பாய்ச்ச வேண்டும்.

கடைசி உழவிற்கு முன் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா தலா 4 பாக்கெட்டுகளை தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். இதனையடுத்து 18 மற்றும் 40வது நாட்களில் கையால் களை எடுத்து 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு முறையாக பராமரித்தால் ஒரு ஏக்கருக்கு 3 மெட்ரிக் டன் மகசூலை பெறலாம். தற்போது ஒரு கிலோ மக்காசோளம் 13 ரூபாய் வீதம் மொத்தம் 39 ஆயிரம் ரூபாய் கிடைக்க வாய்ப்புள்ளது. ஒரு ஏக்கருக்கு உழவு, விதை, உரம், ஆள் கூலி என மொத்தம் 8 ஆயிரம் ரூபாய் செலவாகும். விவசாயிகள் இந்த ஆடிப்பட்டத்தை முறையாக பயன்படுத்தி மக்காசோளம் பயிர் செய்து பயனடையலாம்.

**விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்: அதிகாரிகள் பங்கேற்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,00:55 IST

விழுப்புரம் : விவசாயிகள் குறைகேட்பு கூட்டங்களில் முக்கிய அதிகாரிகள் பங்கேற்க முன் வர வேண்டுமென விவசாயிகள் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்தனர். மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்தில் விவசாயிகள்

சங்க பிரதிநிதிகள் பேசியதாவது: மாவட்டத்தில் மார்க்கெட் கமிட்டிகளில் முறைகேடுகள் நடக்கிறது. உள்ளூர் வியாபாரிகளின் தலையீடு இருப்பதால் வெளியூர் வியாபாரிகள் வருவதில்லை. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விரைவாக பணப்பட்டுவாடா செய்ய வேண்டும். கொள்முதல் நிலையங்கள் பெயரளவில் தான் செயல்படுகின்றன. கலெக்டர் நேரடி ஆய்வு நடத்தினால் தீர்வு கிடைக்கும். ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

விவசாயிகள் குறைகேட்பு கூட்டங்களில் ஆர்.டி.ஓ.,க்கள், மாவட்ட திட்ட அலுவலர், ஊராட்சிகள் உதவி இயக்குனர் போன்ற முக்கிய அதிகாரிகள் வந்தால் பல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். பல ஊராட்சிகளில் சமுதாய கூடங்கள் கட்டி முடித்து திறக்காமல் உள்ளன. அவற்றை திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். மார்க்கெட் கமிட்டிகளில் பிரச்னைகளை தீர்க்க விவசாயிகள், அதிகாரிகள் அடங்கிய கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும். வெளியூர் செல்லும் பஸ்களை வழி மாற்றி டவுன் பஸ்களாக பள்ளி நேரங்களில் இயக்க வேண்டும். விழுப்புரம் அரசு மருத்துவமனையை முழு நேர மருத்துவ மனையாக மாற்ற வேண்டும். கரும்பு விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடத்த வேண்டும். விதை நெல் விற்பனையை வேளாண் துறையில் இருந்து கூட்டுறவுத் துறைக்கு மாற்ற வேண்டும். தனியார் சர்க்கரை ஆலைகளில் கரும்பு எடை மோசடியை தடுக்க பொது இடத்தில் எடைமேடை அமைக்க வேண்டும்.
இவ்வாறு விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

**உழவர் பண்ணை செயல் திட்டம் தயாரிப்பு துவக்கம்**
பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,00:33 IST

மோகனூர்: "சிறு, குறு விவசாயிகளுக்கு, அரசின் திட்டங்களை அமல்படுத்துவதற்காக, உழவர் பண்ணை செயல்திட்டம் தயாரிப்பு பணி, மோகனூர் பகுதியில் துவங்கப்பட்டுள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மோகனூர் வட்டாரத்தில், வேளாண் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் சிறு, குறு விவசாயிகளுக்கு சென்றடையவும், எதிர்காலத்தில் விவசாயிகளின் தேவைகளை அறிந்து, பதிய திட்டங்களை அமல்படுத்தவும், வேளாண் துறையினரால் உழவர் பண்ணை செயல் திட்டம் தயாரிப்பு பணி துவங்கப்பட்டுள்ளது. அதற்காக, மோகனூர் வட்டாரத்தில் உள்ள உதவி வேளாண் அலுவலர்கள், கிராமங்களுக்கு சென்று சிறு, குறு விவசாயிகளை சந்தித்து அவர்களிடம் உள்ள மொத்த நிலப்பரப்பு, சாகுபடி பரப்பு, சாகுபடி பயிர் மற்றும் சர்வே எண் ஆகியவற்றை சேகரித்து பதிவு செய்து வருகின்றனர். மேலும், மோகனூர் வட்டாரத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை சந்தித்து, தங்களின் விபரங்களை தெரிவித்து பதிவு செய்து பயனடையலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்கள்:அமைச்சர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2011,01:28 IST

கிருஷ்ணகிரி: நேரடி நெல் விதைப்பு, இ-வேளாண்மை, திருந்திய கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்களை, விவசாயிகள் பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என்று, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் முனுசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ்நாடு வேளாண் பல்கலைன் அங்கமான பையூர் மண்டல ஆராய்சி நிலையத்தில் இ-வேளாண்மை, உழவர் சம்மேளனம் தொடக்கவிழா, நேரடி நெல் விதைப்பு மற்றும் திருந்திய கரும்பு சாகுபடி தொழில்நுட்ப துவக்க விழா நடந்தது. தமிழ்நாடு வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேச பூபதி தலைமை வகித்தார். கலெக்டர் மகேஸ்வரன் முன்னிலை வகித்தார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திருமலை திட்ட விளக்கஉரையாற்றினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழ ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா வரவேற்றார்.

புதிய திட்டங்களை தொடங்கி வைத்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் முனுசாமி பேசியதாவது: விவசாயிகளிடம் ஒற்றுமை உணர்வு மேலோங்கி, விவசாயிகள் வாழ்வு சிறக்க விவசாயிகள் சம்மேளனம் தொடங்கப்பட்டுள்ளது. சம்மேளத்தின் மூலம் பொருட்களை சந்தைப்படுத்தும் போது, உரிய விற்பனை விலை கிடைப்பது உறுதிசெய்யப்படுகிறது. விவசாயிகளின் கூட்டு முயற்சியால், விளை உயர்ந்த வேளாண் கருவிகளை கொள்முதல் செய்து வேளாண் பணிகளை திறம்பட செய்ய முடியும். விவசாயிகளுக்கும், விவசாயத்துக்கும் கம்ப்யூட்டர் பயன்பாடு இதுவரை எட்டாக்கனியாக இருந்தது. தற்போது விவசாயத்தையும் கம்ப்யூட்டரையும் இணைக்கும் ஒரு பாலமாக இ-வேளாண்மை செயல்படுகிறது.

இதனை விவசாயிகள் முழு அளவில் பயன்படுத்தி வேளாண்மையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஹை-டெக் மாவட்டமாக திகழ ஒத்துழைக்க வேண்டும். டிஜிட்டல் ஃபோட்டோ, கம்ப்யூட்டர், இன்டர்நெட் ஆகியவறை கொண்டு வயலில் ஏற்படும் பிரச்னைகளுக்கு உடனுக்குடன் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கப்படும். இத்திட்டம் நீர் வள நில வளத்திட்டத்தின் நிதியுதவியோடு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலையால் தொடங்கப்பட்டுள்ளது. இ-வேளாண்மையால் உரிய முறையில் இடர்பாடுகள் நீக்கப்பட்டு விவசாயிகள் விளைச்சலை உயர்த்த முடியும். பணியாட்கள் பற்றாக்குறையின் தாக்கம் நெல் சாகுபடியிலும் எதிரொலிக்க தொடங்கியுள்ளது. நெல் நாற்றுகளை நடவு செய்ய இயந்திரங்கள் தேவை என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசின் நீர்வள நிலவளத்திட்டத்தின் மூலம் நெல்நாற்று நடும் கருவியை கொண்டு, 1,000 ஏக்கரில் செயல் விளக்க பண்ணைகளை தமிழ்நாடு வேளாண் பல்கலை அமைத்துள்ளது. நேரடி நெல் விதைப்பில், 50 சதவீதம் வரை பணியாட்களின் தேவை குறைகிறது என

கண்டறியப்பட்டுள்ளது. விவசாயிகள் கடைபிடிக்கும் பராம்பரிய நடவு முறையை விட, நேரடி நெல் விதைப்பின் மூலம், 27 சதவீதம் கூடுதலாக சாகுபடி கிடைக்கும். கரும்பு சாகுபடியில் சாதாரண முறையில் நடவு செய்ய, 4 டன் விதை தேவைப்படும் இடத்தில் திருந்திய கரும்பு சாகுபடி முறையில், 500 கிலோ விதை கரும்பு போதுமானது. திருந்திய கரும்பு சாகுபடி முறைகளை கடைபிடித்தால் கரும்பில், 40 சதவீதம் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். விழாவில், பர்கூர் எம்.எல்.ஏ., கிருஷ்ணமூர்த்தி, ஊத்தங்கரை எம்.எல்.ஏ., மனோரஞ்சிதம் நாகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மானியத்துடன்"கோகோ' சாகுபடி ஊக்குவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2011,02:28 IST

ஈரோடு: மானியத்துடன் கோகோ பயிர் செய்ய தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.நெல், கரும்பு போன்றவற்றுக்கு மாற்றாக, பணப்பயிர் சாகுபடியை தோட்டக்கலைத்துறை ஊக்குவித்து வருகிறது. இதில், ஈரோடு மாவட்டத்தில் கோகோ பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.தென்னைக்கு ஊடுபயிராக ஈரோடு, கோபி, பவானி, சத்தியமங்கலம் போன்ற இடங்களில் கோகோ பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மிகவும் குறைவு.

கிரையல்லோ கோகோ, பாரஸ்டிரோ கோகோ, டிரினிடாரியோ கோகோ என மூன்று வகை உண்டு.மிகக்குறைந்த அளவே உரமிட வேண்டும். ஒன்று முதல் இரண்டு மீட்டர் உயரம் செங்குத்தாக கோகோ செடி வளர்ந்ததும், செங்குத்தான வளர்ச்சி தடைபட்டு மூன்று முதல் ஐந்து வரையிலான பக்கக்கிளைகள் மூலம் பக்கவாட்டு வளர்ச்சி துவங்கும். மரத்தின் உயரத்தை கட்டுக்குள் வைத்தால், கோகோ பழ அறுவடை எளிதாக இருக்கும்.

அறுவடை செய்யப்பட்ட பழங்களை நான்கு நாட்கள் சேமித்து வைக்க வேண்டும். அப்போதுதான், பழ ஓட்டுக்குள் ஏற்படும் நொதித்தலால், தரமான விதைகள் கிடைக்கும். பழத்தின் ஓடு கடினமாக இருக்கம். கல் அல்லது சுத்தியால், விதைகள் சேதமடையாமல் உடைத்து, விதைகளை அகற்ற வேண்டும். ஓட்டின் தோலை கால்நடை தீவனமாகவும், உரமாகவும் பயன்படுத்தலாம்.

ஈரோடு மாவட்டத்தில், 2010ல், 357 ஹெக்டேரில் கோகோ சாகுபடி செய்யப்பட்டிருந்தது. தற்போது, 1,057 ஹெக்டேரில் கோகோ சாகுபடி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கோகோ பயிர் அதிக விளைச்சல் தர மூன்றாண்டுகளாகும்.இதை ஊக்குவிக்க முதலாமாண்டு, 12 ஆயிரம் ரூபாயும், இரண்டாமாண்டு, 4,000 ரூபாயும் தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு மானியம்

வழங்கப்படுகிறது. தற்போது, ஒரு கிலோ கோகோ விதை, 150 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. ஹெக்டேருக்கு, 1.80 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கும்.கோகோ கன்றுகள் அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட தனியார் நிறுவனங்கள் மூலம், ஒரு கன்று, 4.10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அந்தியூர், பவானி ஆகிய இடங்களில் கோகோ கன்றுகள் விற்பனை மையம் செயல்படுகிறது.சாக்லேட், ஊட்டச்சத்து பானம் போன்றவை தயாரிக்கவும், சில பானங்களில் மணம் சேர்க்கவும் கோகோ சேர்க்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் நேரடியாக கோகோ கொள்முதல் செய்கின்றன.

**தக்காளி உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2011,21:16 IST

ஆனைமலை : ஆனைமலை பகுதியில் மழையினால் தக்காளி உற்பத்தி குறைந்தது. தட்டை பயிறு உற்பத்தி அதிகரித்தது.ஆனைமலையை சுற்றியுள்ள கணபதிபாளையம், காந்திஆசிரமம், திவான்சாபுதூர், செம்மேடு, பெரியபோது ஆகிய பகுதிகளில் தக்காளி உற்பத்தி உள்ளது. தற்போது கடந்த சில நாட்களாக மழை பெய்துவருவதால் தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மழைக்காலம் முடிந்த பிறகே தக்காளி உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் அறுபடை செய்யப்படும் தக்காளிகள் மீனாட்சிபுரம் அருகில் உள்ள மார்கட்டிற்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படும். தற்போது ஆறு கிலோ எடையுள்ள கூடை தக்காளி 60 ரூபாய் முதல் 70 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் தட்டை பயிறு உற்பத்தி அதிகரித்துள்ளது. மழையினால் தக்காளி உற்பத்தி குறைந்தாலும் தட்டை பயிறு வரத்து அதிகரித்துள்ளது விவசாயிகளுக்கு ஓரளவு திருப்தியளிப்பதாக உள்ளது. மீனாட்சிபுரம் மார்க்கெட் பகுதியில் தற்போது ஒரு கிலோ தட்டை பயிறு 10 ரூபாய் முதல் 13 ரூபாய் வரை விற்பனையாகிறது.

**நெல் விலை கடும் வீழ்ச்சி : அரிசி 2 மடங்கு உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2011,23:57 IST

கடலூர் : தமிழகத்தில் நெல் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்தாலும், பொதுமக்கள் வாங்கும் அரிசி விலை, இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. கடலூர் மாவட்டத்தில், 20 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில், நெல் பயிர் செய்யப்பட்டது. பருவ மழை, நவீன தொழில் நுட்பம் ஆகியவற்றால், நல்ல விளைச்சல் கண்டுள்ளது. ஆனால், நெல் உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு, ஆதரவான விலையில்லாமல் சோகத்தில் மூழ்கியுள்ளனர். இது ஒரு புறமிருக்க, மார்க்கெட்டில் குறைந்த

விலைக்கு நெல் விற்பனை செய்யப்படும் போது, அரிசி விலை அதற்கேற்றாற்போல விலை குறையாமல், 2 மடங்கு விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது ஒரு மூட்டை சன்ன ரக நெல், மார்க்கெட்டில், 550 ரூபாய்க்கும், மோட்டா ரகம், 500 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. ஒரு மூட்டை நெல்லில் இருந்து, 45 கிலோ அரிசி கிடைக்கிறது. மார்க்கெட்டில் சன்னரக அரிசி, 24 ரூபாய்க்கும், மோட்டா ரகம், 21 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.
இடைத்தரகர்களால்தான் அரிசி, 2 மடங்கு விலையேற்றம் கண்டுள்ளது. விளைச்சல் காரணமாக விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதோடு, அந்த சலுகையும் இடைத்தரகர்களால், பொதுமக்களுக்கு கிடைக்காமல் போய் விடுகிறது.

**தோட்டக்கலை பல்கலைக்கழகம் தேனி மாவட்டத்தில் துவங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2011,22:46 IST

கூடலூர் : தோட்டக்கலை பல்கலைக்கழகத்தை தேனி மாவட்டத்தில் துவங்க வேண்டும் என கூடலூரில் தோட்டக்கலைத்துறை சார்பில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.
ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கிய பயிராக ஏதாவது ஓரிரு பயிர்கள் மட்டுமே இருக்கும். ஆனால், தேனி மாவட்டத்தில் 60 வகையான பயிர்கள் முக்கிய இடம் பிடித்துள்ளன. பயிர்கள் தொடர்பான ஆராய்ச்சிக்கு தகுந்த தட்பவெப்ப நிலையும் தேனி மாவட்டத்தில் உள்ளது. அதனால் வாழை, காய்கறிகளுக்கு குளிரூட்டும் நிலையம் மற்றும் வணிகவளாகம் உருவாக்க வேண்டும். மேலும், தோட்டக்கலை பல்கலைக்கழகம் தேனி மாவட்டத்தில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

**உணவு உற்பத்தி இலக்கு விவசாயத்துறைக்கு உத்தரவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2011,22:42 IST

கம்பம் : தமிழகத்தில் உணவு உற்பத்தி இந்தாண்டு 115 லட்சம் டன், என விவசாயத்துறைக்கு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. தமிழகத்தில் உணவு பொருள்கள் தேவை அதிகரித்து வருகிறது. உணவு உற்பத்தி 42 லட்சம் எக்டேர் பரப்பின் மூலம் 115 லட்சம் டன்னாக இருக்க வேண்டும்.
* அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட தணணீரை பயன்படுத்தி நெல், பருத்தி, கரும்பு, எண்ணெய்வித்துகள், பயறு மற்றும் பருப்பு வகைகள் சாகுபடியில் விவசாயிகள் மும்முரம் காட்ட வேண்டும்.

* சாகுபடி முறைகளில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்தவும், நர்சரி மற்றும் அறுவடையில் மிஷின்களை பயன்படுத்தவும் முயற்சிக்க வேண்டும்.

* அடர் நடவு முறையில் மா, வாழை மற்றும் கொட்டை முந்திரி பயிர்கள் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கூடுதல் மகசூலுக்கு தோட்டக்கலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* விவசாய பொறியியல் துறை தங்களிடம் உள்ள விவசாயத்திற்கு பயன்படும் கருவிகளை குறைந்த வாடகைக்கு தந்து பசுமை புரட்சிக்கு உதவிட வேண்டும்.

* விவசாய பல்கலைகள் உணவு உற்பத்தி அதிகரிக்க, விவசாயிகளுடன் கலந்துரையாடி, தொழில்நுட்பங்களை விளக்க வேண்டும். இவ்வாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## ***அமராவதி அணையில் தூர்வாரும் பணியை விவசாயிகளுக்கே வழங்க வேண்டும் பிரதான கால்வாய் பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை***

*தாராபுரம், ஜூன்.27–*

*அமராவதி அணையில் தூர்வாரும் பணியை விவசாயிகளுக்கே வழங்க வேண்டும் என்று அமராவதி பிரதான கால்வாய் பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்து உள்ளது.*

*அமராவதி அணையின் பிரதான கால்வாய் பாசன விவசாயிகள் சங்க தலைவர் மா.பார்த்தசாரதி, தமிழக பொதுப்பணித்துறை அமைச்சருக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறி இருப்பதாவது:–*

*விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்*

*உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் சுமார் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பாசனம் பெற்று வருகிறது. இந்த அணை நீண்ட காலமாக தூர்வாராததால் மண் மூடி அணையின் கொள்ளளவு குறைந்துவிட்டது. அணையை தூர்வார வேண்டும் என்று விவசாயிகள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்தும் அணை தூர்வாரப்படாமல் உள்ளது.*

*தூர்வாரும் பணியை விவசாயிகளுக்கே வழங்கும் பட்சத்தில், அரசுக்கு செலவு இல்லாமல் விவசாயிகளே அணையில் உள்ள வண்டல் மண்ணை எடுத்து நிலங்களுக்கு*

போடுவதன் மூலம், நிலங்களை வளப்படுத்தும் வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் அமராவதி அணையை தூர்வாரும் பணியை விவசாயிகளுக்கு வழங்கி இலவசமாக விவசாயிகள் வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்க வேண்டும்.

வாய்க்கால் சேதம்

அமராவதி பிரதான கால்வாயின் மேல்பகுதியில் சுமார் 10 மைல் தூரத்துக்கு காங்கிரீட் வாய்க்கால் சேதம் அடைந்துவிட்டது. மேலும் அமராவதி பிரதான கால்வாய் பாசன பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விஸ்தரிக்கப்பட்டு உள்ளது. ஆனால் அணை பகுதியில் உள்ள முதல் பாலத்தை தேவைக்கு ஏற்ப சரிசெய்யாததால் விஸ்தரிக்கப்பட்ட பகுதிக்கு போதிய அளவு தண்ணீர் கிடைப்பது இல்லை. எனவே அந்த பாலத்தை சரிசெய்து, காங்கிரீட் இல்லாத பகுதியில் காங்கிரீட் அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமாராவதி பிரதான கால்வாய் நீண்டகாலமாக முறையான பராமரிப்பு இல்லாதால், கால்வாயும், மதகுகளும், சைபன்களும், கால்வாய் ரோடும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மதகுகள் சரியாக இல்லாததால் கடைமடைகளுக்கு சரியாக தண்ணீர் போய் சேருவதில்லை. சைபன்கள் பழுது காரணமாக முதல் தண்ணீர் திறந்துவிடும்போது சைபன்கள் அடைத்துக்கொள்வதால், அதை சரிசெய்து கீழ்மடைகளுக்கு தண்ணீர் கொண்டு செல்வது விவசாயிகளுக்கு மிகுந்த சிரமத்தையும், காலதாமதத்தையும் ஏற்படுத்துகிறது. இந்த பணிகளையும், வாய்க்காலையும் கண்காணிக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் வாகனம் மூலம் செல்வதற்கு ரோடு இல்லாததால் கண்காணிக்க முடியவில்லை. எனவே மதகுகள், சைபன்கள் ஆகியவற்றை சரிசெய்து, அதிகாரிகள் கண்காணிக்க செல்லும் வகையில் ரோடு அமைத்துக்கொடுக்க வேண்டும்.

தாராபுரத்துக்கு மாற்ற வேண்டும்

பிரதான கால்வாயில் அதிக பாசன பரப்புள்ள 11–2, 16–5, 28–3, 33–1, 35–1, 35–7 ஆகிய கிளை வாய்க்கால்களுக்கு முன்னுரிமை கொடுத்து அந்த கிளை வாய்க்கால்களை விரைவில் காங்கிரீட் தளம் அமைத்து கொடுப்பதோடு, மீதமுள்ள அனைத்து கிளை வாய்க்கால்களையும் காங்கிரீட் அமைத்தால்தான் கடைமடை பகுதிக்கு எளிதாக தண்ணீர் சென்று சேரும். எனவே தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த பணியை செய்ய உத்தரவிட வேண்டும்.

தற்போது செயற்பொறியாளர் அலுவலம் அமராவதி அணையில் இருந்து 150 கி.மீ. தூரத்தில் பாசன பகுதியின் கடைகோடியான கரூரில் உள்ளது. இதனால் விவசாயிகள்

மற்றும் அரசு அதிகாரிகள் அலுவல் பணி காரணமாக செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் அரசுக்கு வீண் செலவுகளும் காலதாமதங்களும் ஏற்படுகிறது. எனவே கடைகோடியில் உள்ள செயற்பொறியாளர் அலுவலகத்தை மத்திய பகுதியில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு உள்ள தாராபுரத்துக்கு மாற்றினால் விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்கும் வசதியாக இருக்கும். எனவே உடனடியாக செயற்பொறியாளர் அலுவலகத்தை தாராபுரத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்பர் அமராவதி திட்டம்

நீண்ட நாட்களாக கிடப்பில் இருக்கும் தாராபுரம் மற்றும் சங்கரண்டாம்பாளையம் அருகில் தடுப்பணை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றினால், மழை காலங்களில் சேதமாகும் நீரை தடுத்து சேமித்து தாராபுரம், சின்னதாராபுரம், கரூர் பகுதிகளின் பாசன பகுதிகளுக்கு பயன்படுத்தலாம். தாராபுரம் பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வும் காணப்படும். எனவே இந்த திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

மேல் அமராவதி (அப்பர் அமராவதி) திட்டம் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் உள்ளது. இதனால் ஆண்டுதோறும் அணையின் மேல்பகுதியில் பெய்யும் கனமழை காலங்களில் தற்போதைய அணையின் கொள்ளளவுக்கு மேல் தண்ணீர் வீணாகி வருகிறது. இந்த திட்டத்தை நிறைவேற்றினால் பாசன பகுதிகளை விஸ்தரிப்பு செய்யவும் வாய்ப்பு உள்ளது. எனவே இந்த திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி விவசாயிகளின் நீண்டகால கனவை நனவாக்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளது.

## குன்னூர் ஏல மையத்தில் பலத்த போட்டி: 88 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், ஜூன்.27–

குன்னூர் ஏல மையத் தில் பலத்த போட்டி காரணமாக 88 சதவீத தேயிலை தூள் விற்பனை யானது. மேலும் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை உயர்வு ஏற்பட்டது.

ஏலம்

வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் குன்னூரில் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் நடத்தும் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்தில் உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகிறார்கள்.

*விற்பனை எண் 25–க்கான ஏலம் கடந்த 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 20 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 10 லட்சத்து 33 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 5 லட்சத்து 87 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

போட்டி

*ஏலத்தில் பாகிஸ்தான், ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த ஏற்றுமதி யாளர்கள் கலந்து கொண்டு அதிகளவு தேயிலை தூளை வாங்கினர்.*

*இதனால் உள்நாட்டு வர்த்தகர்களும் போட்டி போட்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனை தொடர்ந்து தேயிலை தூளில் அனைத்து ரகங்களுக்கும் 3 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டது. இதனால் 88 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 160 ரூபாய் என்று ஏலம் சென்றது. 80 தொழிற்சாலைகள் தங்கள் சி.டி.சி. ரக தேயிலை தூளை 100 ரூபாய்க்கு விற்பனை செய்தனர். 190 ரூபாய் என்பது ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக இருந்தது.*

*30 தொழிற்சாலைகள் தங்கள் ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளை 100 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்தனர். தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 30 ரூபாயில் இருந்து 43 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 135 ரூபாய் வரையிலும் ஏலம் சென் றது.*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 43 ரூபாயில் இருந்து 47 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 136 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றன. விற்பனை எண் 26–க்கான ஏலம் வருகிற 30, 1 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 54 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*

## கொலக்கம்பை பகுதியில்

# ஆரஞ்சு பழ மரங்களை தாக்கும் மர்ம நோய்

## விவசாயிகள் விரக்தி

கொலக்கம்பை, ஜூன்.27–
கொலக்கம்பை பகுதியில் ஆரஞ்சு பழ மரங்களை மர்ம நோய் தாக்கியதால் இலைகள் உதிர்ந்து காய்ந்து காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் விரக்தி அடைந்து உள்ளனர்.


### விவசாயிகள்

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப் புற பகுதி களில் பெரும்பாலான சிறு, குறு தேயிலை விவசாயிகள் தேயிலை தோட்டத்தில் ஊடு பயிராக ஆரஞ்சு மரத்தை விவசாயம் செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

ஆனால் கடந்த ஆண்டுகளுக்கு சில முன்பு இந்த பகுதியில் உள்ள ஆரஞ்சு பழ மரங்களைமர்மநோய் தாக்கியதால் இலைகள் அனைத்தும் உதிர்ந்து காய்ந்து போய் விட்டது. இதனால் விரக்தி அடைந்த ஆரஞ்சு பழ விவசாயிகள் ஆரஞ்சு மரங்களை விறகுக்காகவும், மேரக்காய்க்கு பந்தலிடவும் பயன்படுத்தி வருகின்றனர்.

### 25 கிலோ

இது குறித்து விவசாயி



ஆனந்த் என்பவர் கூறியதாவது:– கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர் மட்டம், டெராமியா, கிளிஞ்சடா, சட்டன் உள்ளிட்ட பகுதிகளில் தேயிலை தோட்டத்தில் செடிகளுக்கு நிழலாகவும், ஊடு பயிராகவும் ஆரஞ்சு பழ நாற்றுக்களை நடவு செய்து, அதில் அதிகளவு வருமானம் ஈட்டி வந்தனர்.

ஆண்டுக்கு இரண்டு முறை ஆரஞ்சு பழ சீசன் என்பதால் ஒவ்வொரு மரத்திலும் சுமார் 20 கிலோ முதல் 25 கிலோ வரை மகசூல் அளித்து வந்தது. இவை மொத்தமாக பறிக்கப்பட்டு, கோவை, ஊட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பழ மண்டிகளுக்கு கிலோ கணக்கிலும், கூடைகளில் அடைத்து கூடை கணக்கிலும் விற்பனை செய்து வந்தனர்.

### மர்ம நோய்

கடந்த சில வருடங்களாக இந்த மரங்களில் மர்ம நோய் தாக்கி இலைகள் அனைத்தும் உதிர்ந்தும், படிப்படியாக மகசூல் குறைந்தும் காணப்பட்டது தற்பொழுது மரங்கள் முழுவதும் காய்ந்து போய் பயனில்லாமல் உள்ளது.

இதனால் ஆரஞ்சுபழ விவசாயிகள் தங்கள் காய்ந்து போன மரங்களை விறகுக்காகவும், மேரக்காய் கொடிகளுக்கு பந்தலாகவும் பயன்படுத்தி வருகிறோம். வரும் காலங்களில் ஆரஞ்சு பழங்களை வெறும் கண்காட்சியில் மட்டுமே பார்க்க கூடிய நிலை ஏற்பட்டு உள்ளன. இதில் தோட்டக்கலைத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு ஆரஞ்சு மரங்களை தாக்கும் மர்ம நோயை கண்டறிந்து அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தி வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## வரத்து அதிகரிப்பால் உளுந்து, துவரை விலை சரிவு

பதிவு செய்த நாள் 6/26/2011 3:29:08 AM



விருதுநகர்: வரத்து அதிகரிப்பால் உளுந்து மூட்டைக்கு ஸி300, துவரை ஸி200 வீதம் விலை சரிந்துள்ளது. பாசிப்பயறு வரத்து குறைவால் ஸி400 உயர்ந்துள்ளது.
பர்மா உளுந்து வரத்து அதிரித்துள்ள நிலையில் குஜராத், மகராஷ்டிரா, ஆந்திர மாநிலங்களில் இருந்தும் கோடை உளுந்து வரத்து அதிகரித்துள்ளதால் மூட்டைக்கு ஸி300 வரை விலை குறைந்துள்ளது. உளுந்து மூட்டை (100 கிலோ) தஞ்சை ஸி4,200, பர்மா பருவட்டு ஸி4,000, பொடி ஸி3,600, உருட்டு உளுந்தம் பருப்பு லயன் ஸி5,800, பர்மா பருவட்டு ஸி5,500, பொடி ஸி5,000, தொளி ஸி5,000 என விற்பனையானது.
ஆஸ்திரேலியா மசூர் பருப்பு காய் (100 கிலோ) ஸி2,400, மசூர் பருப்பு ஸி3,200 என விலை குறைந்துள்ளது. பர்மா துவரை வரத்து அதிகரித்துள்ளதால், மூட்டைக்கு ஸி200 குறைந்துள்ளது. கடலைப் பருப்பு வரத்து ஆவணி மாதத்திற்கு பிறகே துவங்கும் என்ற நிலையில், விலை உயர்ந்து வந்தது. விலை உயர்வால் விற்பனை மந்தமாகி, கடலைப்பருப்பு (80 கிலோ) ஸி4,575 லிருந்து ஸி4,525ஆக சரிந்துள் ளது. கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ஸி1,500 லிருந்து ஸி1,475 என குறைந்துள்ளது. பாசிப்பயறு வரத்து குறைந்துள்ளதால் மூட்டைக்கு ஸி400 உயர்ந்துள்ளது. தஞ்சை பயறு ஸி3,800, கோவில்பட்டி நாடு ஸி3,300, ஆந்திரா பயறு ஸி4,000, பாசிப்பயறு லயன் ஸி5,500, நாடுபயறு ஸி5,200 என விற்பனையானது.
வத்தல் சீசன் முடியும் நிலையில், தரமற்ற வத்தலாக வருகிறது. விருதுநகர் வத்தல் மார்க்கெட்டிற்கு கடந்த வாரம் 300 மூட்டை வத்தல் வந்துள்ளது. தரம் குறைந்த சம்பா வத்தல் குவிண்டால் ஸி6,500 முதல் ஸி7,000, தரமான வத்தல் ஸி7,500 முதல் ஸி8,000, குண்டூர் ஏசி வத்தல் குவிண்டால் ஸி9,000 முதல் ஸி10,000 என விற்பனையானது.